ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத சந்திரமௌளீசுவராய நம:.

ஆர்ய தர்மம்.

यत्कण्ठे गरलं विराजतितरां शीर्षे च मन्दाकिनी
उत्संगे च शिवामुखं कटितटे शार्दूलचर्माम्बरम् ।
माया यस्य रुणद्धि विश्वमखिलं तस्मै नमश्शम्भवे
जम्बूवज्जलबिन्दुवज्जलजवज्जम्बालवज्जालवत् ॥

எவருடைய கழுத்தில் நாகப்பழம் போல் காள கூட விஷமானது விளங்குகின்றதோ, எவருடைய சிரஸில் ஜலத்திவலை போல் மாந்தாகினீ என்கிற கங்கையானவள் பிரகாசிக்கிறாளோ, எந்தமஹான் மடியில் பத்மம் போல பார்வதிதேவியினுடைய முகமானது ஜ்வலிக்கின்றதோ எவருடையஇடுப்பில் அற்பஜலமும் சேறுமுள்ள பூமியைப் போன்ற நிறமுள்ள புலித்தோல் அலங்காரமாயிருக்கின்றதோ, எவருடைய மாயையானது சகலலோகங்களையும் வியாபித்திருக் கின்றதோ, அவ்வித மகிமை பொருந்திய, விரும்பிய சுகங்களைக் கொடுக்குந் திறமை வாய்ந்த ஸ்ரீ சம்புவுக்கு நமஸ்காரம்.

இங்கு சகல லோகங்களையும் பஸ்மமாகச் செய்ய வந்த விஷத்தை நாகப்பழம் போல் புசித்தா ரென்பதாலும், பகீரதனென்கிற பக்தனுடைய வேண்டுகோளை நிறைவேற்ற வேண்டி கங்கையைத் தரித்தார் என்பதாலும், மூவுலகங்களுடைய சிருஷ்டிஸ்திதி ஸம்ஹாரமென்கிற கர்மாவைச் செய்ய வேண்டி பராசக்தியான ஸ்ரீ பார்வதீ தேவியைத் தம் அங்கத்தில் வைத்திருக்கிறா ரென்பதாலும், லோக க்ஷேமத்தையே முக்கியமாய்க் கருதி அந்தந்த சமயங்களில் நேரும் இடையூறை விலக்கவல்லமை பொருந்திய மூர்த்தி ஸ்ரீ பரமேசுவரமூர்த்தியென்றும் அப்பிரபுவை உபாஸித்தால் எப்பொழுதும் க்ஷேமத்தையடையலாமென்றும் தெரிகிறது. சுபம்.

ஆர்ய தர்மம்.

ருதிரோத்காரி-௵ புரட்டாசி-௴ ௧௨

கோவின் ஸ்வரூப நிரூபணம்.

यस्याश्शिरसि ब्रह्माऽऽस्ते स्कन्ददेशे शिवस्स्मृतः ।
पृष्ठे विष्णुस्तथा तस्थौ श्रुतयश्चरणेषु च ।
या अन्या देवताः काश्चित् तस्या लोमसुतास्थिताः ॥

என்ற பிருஹத்பாராசர சம்ஹிதையின் வசனங்களால், ஆவின் சரீரமானது மற்றையப் பிராணிகளைப்போல கேவலம் பாஞ்சபூதிகமாத்திரமன்றி, சகல தெய்வீகத்தன்மை பொருந்தியுள்ளதெனவும், வெளியாகின்றது. எங்ஙனமெனில், பசுவின் சிரசில் பிரமதேவனும், கழுத்திற் பரமனும், பின்புறம் திருமாலும், சரணங்களில் மறைகளும், கேசங்களில் மற்றுமுள்ள தேவர்களும், வசிக்கின்றனரென்று இவ்விதம் ஆரம்பத்தில் சுருக்கமாய்க்கூறி, பின்னர், ஒவ்வொரு அவயவமும் ஒவ்வொரு தேவதாரூபமென நன்கு விளக்குகின்றார். அவற்றில் சிலவற்றை ஈண்டு வரைவாம்:—

"शृंगमूले स्थितो ब्रह्मा शृंगमध्ये तु केशवः ।
शृंगाग्रे शङ्करं विद्यात् त्रयो देवाः प्रतिष्ठिताः ॥"

"கோ சிருங்கத்தின் கீழ்ப்பிரதேசத்தில் பிரமனும், மத்தியில் விஷ்ணுவும், அக்ரபாகத்தில் சங்கரனும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றனர்."

"शृंगाग्रे सर्वतीर्थानि स्थावराणि चराणि च ।
सर्वे देवा स्स्थिता देहे सर्वदेवमया हि गौः ॥"

சிருங்கத்தின் நுனியில் புண்ணியநதி தீர்த்தங்களும் தடாக தீர்த்தங்களும் சரீரத்தில் சகல தேவதைகளும் வஸிக்கின்றன.

"ललाटाग्रे स्थिता देवी नासामध्ये तु षण्मुखः ।
कम्बलाश्वतरौ नागौ तत्कर्णे यौ व्यवस्थितौ ।
दन्तेषु वसवश्चाष्टौ जिह्वायां वरुणस्स्थितः ॥"

"நெற்றியில் பராதேவதையான ஸ்ரீ அம்பிகையும், மூக்கின் மத்தியில் முருகக்கடவுளும், காதுகளில் நாகங்களும், கண்களில் சூரியசந்திரர்களும், தந்தங்களில் அஷ்டவசுக்களும், நாக்கில் வருணனும், வஸிக்கின்றார்கள்."

"सरस्वती च हुंकारे यमयक्षौ च गण्डयोः ।
ऋषयो रोमकूपेषु प्रस्रावे जाह्नवीजलम् ॥
कालिन्दी गोमये तस्या अपरा देवतास्तथा ।
अष्टाविंशतिदेवानां कोट्या लोमसुतास्थिताः ।
उदरे गार्हपत्योऽग्निः हृद्देशे दक्षिणस्तथा ॥"

"ஹுங்காரசப்தத்தில் வாணியும், கன்னப்பிரதேசங்களில் யக்ஷகாலர்களும், प्रस्रावे அதாவது நீரில் கங்காஜலமும், கோமயத்தில் யமுனையும், கேசங்களிற் மற்றுமுள்ள 28 கோடி தேவர்களும் வஸிக்கின்றனர். அன்றியும் கார்ஹபத்தியம், தக்ஷிணாக்கினி, ஆஹவனீயமெனப்பெயர்பூண்ட இம்மூன்று அக்கினிகளும்முறையே உதரம், இருதயம் முகம் இந்தவிடங்களிலும் உள்ளன. ஆவஸக்தியென்ற அக்கினியும் வயிற்றிலிருக்கின்றது" என இவ்வாறாக கோவின் தெய்வீகத்தன்மையை முனிபுங்கவரான பராசரர் நன்கு உணர்த்தியுள்ளார்.

கோசம்ரக்ஷணம்.

பசு கட்டுமிடமானது மிகப்பரிசுத்தமாகவும், துஷ்டஜந்துக்கள் வசிக்கக்கூடியபடி நெருக்கமின்றியும், மேடுபள்ளமின்றி விசாலமான சமபூமியாகவு மிருத்தல் வேண்டும். அத்தகைய

சாலையில் பசுக்களை தென்முகமாகவாவது அல்லது வடக்கு முகமாகவாவது கட்ட வேண்டுமேயல்லாமல் வேறு திக்காக கட்டலாகாதென

“दक्षिणाभिमुखा गाव उत्तराभिमुखा अपि ।
बन्धनीयास्तथैतास्तु न च प्राक् पश्चिमामुखाः ॥

பாராசரஸம்ஹிதை மூன்றாவது அத்தியாயத்திற் கூறப்பட்டுள்ளது. வயிறார் மேய்ந்த பசுவானது திரும்பிவருவதற்கு சிரமப்படுமாதலால் அதை மேயவேண்டி வெளியேவிடும் சமயத்தில் அதிக்தூரம் ஓட்டிச் செல்லுதல் கூடாதென்க. இக்கருத்தையே

“न दूरे तास्तु मोक्तव्याश्चारणाय कदाच न ।
दूरे गावश्चरन्त्यो वै न भवन्ति शुभायनाः ॥”

என்ற சுலோகத்தால் பராசரரே நன்கு நிரூபிக்கின்றார்.

“प्रातरेव हि दोग्धव्या दुह्यास्सायं तथा गृही ।”

என்ற வாக்கியத்தால் காலை மாலை இவ்விரண்டு காலங்களில் தான் கோவைக் கறக்கலாமென வேற்படுகின்றது. அதிலும் சினைமாடு, கன்றிழந்தபசு இவற்றைக் கறக்கலாகாது. அன்றியும் கன்றுபோட்டு பத்துதினங்களுக்குள் கறப்பவன் நரகத்திற்குள்ளாவானெனவும் சரீரபலமற்றதும், பிணியுற்றதும், இரண்டு கன்றுகளுள்ளதும், புஷ்பிணியுமான பசுவைக் கறந்தால் நம் க்ஷேமம் குன்றிவிடுமெனவும்,

गौरवत्सा न दोग्धव्या न चैवं गर्भसन्धिनी ।
प्रसूता च दशाहार्वाक् दोग्धा च नरकं व्रजेत ॥
दुर्बला व्याधिसंयुक्ता पुष्पिता या द्विवत्सभूः ।
सा साधुभिर्न दोग्धव्या वर्णिभिस्सुखमीप्सुभिः ॥”

என்ற இவ்வசனங்கள் கூறிநிற்பதைக் காண்க. கோக்களையடித்தலும், கயிறு முதலிய சாதனங்களாற் கட்டியிழுத்து

வருத்துதலும் நரகதுன்பத்திற் கேதுவென,

"ताडयन्ति च ये पापा ये चाकर्षन्ति ता नराः ।
नरके पच्यतेऽङ्गानि श्वासेन च प्रपीडिताः ॥ "

முதலிய மந்திரங்கள் கூறுகின்றபடியால் மிருதுவான சப்தத்தினாலேயே அவற்றைப்போட்டிச் செல்லல் வேண்டும். பின்னும் நமக்கு வேலையின்றி ஒழிந்த நேரங்களில் அவற்றைக் கவனிப்போமென நினையாது நம் சரீரசுகத்தை மேலெனக் கருதி கவனித்துக் கொள்வதுபோலவே அவற்றையும் நன்கு கவனித்து, அவ்வக் காலங்களில் உணவு, பருகும்நீர் முதலியவற்றைக் கொடுக்கவேண்டும். ஈண்டு மற்றோர் விஷயம் கவனிக்கத்தக்கது. அஃது, சிலர் பசுக்களைகறக்கின்றவரை உணவளித்துப் பாதுகாத்து, வயது சென்றதும் இனி உபயோகமில்லை யெனக்கருதி வெளியே விரட்டி விடுகின்றன ரென்பதேயாம். இவ்விதம் அதைத்தன் முதிர்ந்த வயதில் தங்கவிடமின்றி வெயிலிலும், மழையிலும் காற்றிலும் அடிபட்டு, மிகவும் மெலிந்திருக்கும் யாக்கையை காக்கை முதலியவை கொத்திபீடிக்குங்கால் மிகவும் வருந்தும்படி விட்டுவிடுவது மிக்ககொடிய செயலாதாலால், அவ்வாறு செய்யாது, அதன் வாணாள் முழுதும் நம்மாலியன்றவரை பாதுகாப்பது நாம் செய்யும் முழுமுதற் தருமமாகும்.

ஸாமோபாகர்ம கால நிர்ணயம்.

(சசடு-வது பக்கத்தொடர்ச்சி.)

எவரெவர்கள் எந்தெந்த சாகா நாயகர்களோ அவரவர்கள் அந்தந்த சாகீயர்களின் உபாகர்மாவைத்தான் மௌட்டியாதி தோஷங்களை யடைந்திருக்குந் தருணத்தில் தடை செய்கிறவர்கள் என்ற விபரீத்தியை எல்லோரும் அவசியம் அங்கீகரிக்க வேண்டும். இல்லாவிடில் சாகா நாயகர்களான

குருசுக்கிரர்களுக்கும் மௌட்டியாதி தோஷங்களை ஒப்புக் கொள்ள முடியாமற் போய்விடும். குரு சுக்கிரர்களுக்கு மட்டிலும் மௌட்டிய தோஷத்தை யங்கீகரித்து அங்காரகனுக்கு மௌட்டிய தோஷத்தை ஒப்புக் கொள்ளாமற் போனல் அந்த அங்காரகனிடத்திலேயே கீழ்ச்சொன்ன வியாப்திக்கு வ்யபிசாரம் ஏற்பட்டு விடும். அஃதன்றியும் குரு சுக்கிரர்களுக்கு மட்டிலுந்தான் மௌட்டியதோஷம் என்பதில் பிரமாணமுமில்லை. மேலும் அங்காரகனை சாகாதீசனுகக் கூறும் வசனமானது அவனுக்கு மௌட்ய தோஷத்தை ஒப்புக் கொள்ளாவிட்டால் நிஷ்பலமாய் முடியும். அங்காரகனுக்கு மௌட்டிய தோஷமில்லை யென்பதில் பிரமாணமில்லை யாகையாலேயே கீழ்க்கூறிய வியாப்தி அங்காரகனைத் தவிர மற்றவர்கள் விஷயம் என்று சொல்லவும் முடியாது. ஆகையால் வேறு பாதகப் பிரமாண மொன்றுமில்லாத வரையில் அங்காரகனுக்கு மௌட்டியதோஷம் உண்டென்று தனக்கொப்புக் கொள்ள இஷ்டமில்லாமலிருந்தாலும் கீழ்க்கண்ட அனுமான பலத்தால் ஒப்புக் கொண்டே தீரவேண்டும். தவிர எவன் எந்தெந்த வஸ்துக்களுக்கு அதிஷ்டாதாவாக விருக்கின்றனோ அவனவன் அந்தந்த வஸ்துக்களைச் சார்ந்த ஸாகல்ய வைகல்யங்களுக்குக் காரணமான ஒரு வித சக்தியையுடையவனுக விருப்பான். கண்காது முதலிய இந்திரியங்களுக்கு அதிஷ்டாதாவான சூரியன் முதலியவர்கள் அவ்விந்திரியங்களின் ஸாகல்ய வைகல்யங்களுக்குக் காரணமாயிருப்பது போல் ஸாமவேதாதிஷ்டாதாவான அங்காரகனும் அச்சாம வேதியர்களினுபாகர்ம ஸாகல்யா வைகல்யத்திற்கு முக்கியகாரணமாக விருப்பான் என்பது இந்த சர்வ சாமான்னிய அனுமானத்தாலு மேற்படுகின்றது. ஆதலால் அங்காரகனுக்கு மௌட்ய தோஷமில்லை யென்பது பொருந்தாது. यस्तर्केणानुसन्धत्ते என்ற ஸ்மிருதி வாக்கியத்தால் தர்மசாஸ்திரத்திலும் விரோதமில்லாத தர்க்கத்தை ஆதரிக்கத்தான் வேண்டும். மேலும் சாகாதீசே சக்தியுக்தே என்ற வாக்கியமும் அங்காரகனுக்கு

மௌட்யாதி தோஷத்தை யறிவிக்கின்றது. எவ்விதமெனில் அபியுக்தர்கள் சொன்னபடி அந்த வாக்கியத்திலிருக்கின்ற சக்திபதத்திற்கு மௌட்யாதி தோஷ ராஹித்யம் என்ற அர்த்தந்தான் சரியானது. அப்படியே அவ்வாக்யத்திற்கு சாகாதீசன் மௌட்டியாதிகளை யடைந்திருந்தால் அப்போது உபாகர்மம் செய்வது சுபாவஹமன்று என்ற நிஷேதத்தில் தான் தாத்பரியத்தை ஒப்புக் கொள்ளவேண்டும். இவ்வித மிருக்க சாகாதீசே என்ற பதத்திற்கு அங்காரகன் விஷயமாக ஸங்கோசம் செய்யப் பிரமாணமில்லை யாதலால் இந்த வாக்கிய மே அங்காரகனுக்கு மௌட்ய தோஷத்தை ஸ்பஷ்டமாய்க் கூறுகின்றது ஆதலாலும் அங்காரகனுக்கு மௌட்டிய தோஷமில்லை யென்பது பொருந்தாது. இவ்வாக்கியத்தில் விசாரிக்க வேண்டிய விஷயங்களனேகமிருந்தாலும் விரிவிற்கஞ்சி அவைகளை விசாரிக்கவில்லை.

6. காதிராதி கிருஹ்யங்களில் கூறினகாலம் முக்கிய மென்பது எல்லோருக்கும் சம்மதமானதால் அந்த பாகத்தை விட்டு விட்டு நமக்கு விருத்தபாகத்தைமாத்திரம் கண்டிக்கின்றேன். காதிராதி கிருஹ்யத்தில் சொன்னகாலத்திலே, மிகுந்த பக்தியை யுடையவர் சூத்திரங்களில் பிரயோகஞ் செய்யாத பூர்வபக்ஷபதத்தைப் பிரயோகித்து வாக்கியார்த்தங்களை வர்ணிப்பது அழகல்ல. ஸூத்திரத்தில் பாத்திரபத ஹஸ்தம் உபாகர்மகால மென்று மாத்திரந்தான் புலப்படுகிறது. அப்பாத்ரபத ஹஸ்தமும் இரண்டு பக்ஷங்களுக்கும் சாதாரணமாயுள்ளது. பாத்ரபத மாதத்தில் இவ்விரு பக்ஷங்களிலும் ஒரு சமயம் ஹஸ்த நக்ஷத்திரம் நேரும் பக்ஷத்தில் இரண்டு காலமும் சூத்திரத்திலும் முக்கிய மென்று புலப்படுவதால் அவ்விரண்டு காலங்களுக்குள் பிரதமாதிக்ரமே, என்ற நியாயப்படி பூர்வபக்ஷ ஹஸ்தத்தில்தான் அனுஷ்டானம் செய்வது உசிதம் என்று விநிகமகத்தை ருத்திரஸ்கந்தாசிரியர் எடுத்துக் கூறினரேயல்லாமல் அபரபக்ஷஹஸ்தத்தை நிராகரிக்கவில்லை.

பிறகு அந்தருத்திரஸ்காந்தாசிரியரே ஸூத்திரபதங்களுக்கு உரை எழுதுந்தருணத்தில் ப்ரௌஷ்டபத மாதத்திய ஹஸ்த நக்ஷத்திரத்தோடு கூடிய காலத்திற்றான் உபாகர்மம் செய்ய வேண்டுமென்று பொதுவான காலபதத்தால் சூத்திராபிப்ராயத்தை விளக்கிக் காட்டினார். அப்படியே உபாகர்ம கால நிர்ணயத்திற்குப் பூர்வபக்ஷத்தில் சம்பவிப்பதாலும் ஸந்நிகிருஷ்டமானதாலும் என்ற இவ்விரண்டு காரணங்களை ஆலோசித்தாலும் அவருக்கு பக்ஷத்தில் அபேக்ஷை இல்லையென்று புலப்படுகின்றது. அதையுந்தவிர ப்ரௌஷ்டபத மாதத்திய ஹஸ்தநக்ஷத்திரத்தில் என்று ஸங்கல்பம் செய்வதுதான் சம்பிரதாய சித்தமாயிருக்கிறது. ஆதலால் எந்த பக்ஷத்தில் ஹஸ்தநக்ஷத்திரம் வந்தாலும் சூத்திரபாஷ்யங்கள் அதில் உபாகர்மம் செய்யலாம் என்று தீர்மானிக்கின்றன. அபரபக்ஷ ஹஸ்தத்திலும் அனுஷ்டானம் பண்ணினால் अर्ध त्येति என்ற சூத்திர விருத்திகளின் விரோதம் தடையின்றி ஏற்படுமென்றால் உத்ஸர்க்க சாஸ்திரத்தால் கிடைத்தகாலத்தில் உபாகர்மம் செய்யும் பக்ஷத்தில்தான் அந்த சூத்திரத்தில் காலம் உத்ஸர்க்கமாக எழுதப்பட்டது. அதனாலும் பாஹஸ்தத்தைக் கண்டிக்க இயலாது. ஆகையாற்றான் ருத்ரஸ்கந்தாசிரியர் சிராவணியிலுபாகர்மம் பண்ணினாலும் பௌஷியிற்றான், உத்ஸர்க்கம் பண்ணவேண்டுமென்று எழுதினார். அய்யாவர்களின் மதத்திலும் ஆசௌசாதிகளால் பூர்வஹஸ்தத்திலுபாகர்மம் செய்யத் தடைப்பட்டு கௌணகாலத்திலுபாகர்மம் செய்ய நேர்ந்தால் அப்போது அந்த சூத்திர ஸித்த கால ஸங்கியை பரித்யாகந்தான் செய்ய வேண்டியிருக்கிறது. த்விதீய ஹஸ்தத்தை நிஷேதிக்கின்றவர் முன்பு அந்தக் காலத்துக்குப் பிரஸக்தி கூறவேண்டும். பிரஸக்தியோ இரண்டு காலங்களையும் ஸாமான்னியமாய்க் கூறுகின்ற சூத்திரத்தினால்தான் என்று, காதிராசிரியருக்கும் இரண்டாவது ஹஸ்தம் கர்மகாலம் இஷ்டம் தான் என்று இரண்டாவது ஹஸ்தத்தை மறுக்கின்றவரும் ஒப்புக் கொள்ளவேண்டும். காதிராசியர் சிராவண பூர்ணிமையும் கௌணகாலமாக ஸாமகர்களுக்கு அங்கீகரிக்கின்றார்

என்று அய்யாவர்களி னபிப்பிராயமும் அஸங்கதம். ஏகே என்ற பதத்தால் சிலர், பக்ஷமென்று சூத்திரத்தின் அர்த்தம் புலப்படுகின்றதே யல்லாமல் கௌணகாலமாக அதை ஒப்புக் கொள்ள சூத்திரத்தில் ஒரு பதமும் இடங்கொடுக்கவில்லை.

7. ஏழாவது பாராவும் ஒழுங்கானதல்ல. கிருஹ்யங் களைக் காட்டிலும் ஸதாசாரங்களுக்குப் பிராமாண்யம் அதிக மென்று முன்னமே சொல்லப்பட்டபடியால் பிரகிருத விஷ யத்தில் ஸதாசாரத்தை ஆதரிக்க வேண்டாம் என்ற அய்யாவர் களின் வார்த்தையை யார்தான் ஆதரிப்பார்களோ தெரிய வில்லை. மனு, முதலிய ஸ்மிருதிகளுக்கு மூலமாக வேதத்தை ஊகிப்பது போல் ஸதாசாரத்திற்கு மூலமாக வேதத்தை ஊஹிப்பது சகல ஆஸ்திகர்களுக்கும் சம்மதந்தான். அவ் வித ஸதாசாரத்தாலூகிக்கப் பட்ட சுருதியே அங்காரகனுக்கு மௌட்டிய தோஷத்திலும் அபரபக்ஷ ஹஸ்தத்திற்கு உபா கர்மகாலத்திலும் பிரமாணமானதால் இவ்விரு விஷயங்களிலும் பிராமணம் கிடையாதே என்ற வருத்தத்திற்கு இடமில்லை. மேலும் அபரபக்ஷ ஹஸ்தத்தை உபாகர்மகாலமாக ஒப்புக் கொள்ளாவிட்டால் ஆசௌச சமயத்தில் அக்காலத்தில் செய்த உபாகர்மம் விதிக்கு மாறுதலாக செய்யப்பட்டது செய்த தாக ஆகாது என்ற நியாயப்படி நிஷ்பலமாக முடியும்.

8. எட்டாவது பாராவும் சிஷ்டர்களால் அங்கீகரிக்கத் தக்கதல்ல. ஹஸ்தர்க்ஷம் என்றவாக்கியம் ஆசௌசாதிகளால் பூர்வபக்ஷ ஹஸ்தத்தில் உபாகர்மம் நடை பெறுமற்போனால் அபரபக்ஷஹஸ்தத்தில் செய்யும்படி பிரவர்த்திக் கின்றது என்று ஒப்புக்கொண்டு அந்தவசனம் அபரபக்ஷஹஸ்தத்தை கௌணகாலமாக விதிக்கவரவில்லை என்று சொல்வது நகைப் புக்கிடமாகும். ஏனெனின் சாஸ்திரங்களில் சகல கர்மாக் களுக்கும் கௌணம் முக்கியம் என்று இவ்விரு காலங்களைத் தவிர மூன்றுவது காலம் சொல்லப்படவில்லை. ஸாமகர்களின் உபாகர்மாவைப் பிரஸ்தாபிக்குமிடத்து இருக்கும் இச்சங் கிரக வசனத்தை ரிக்வேதிகள் விஷயமாகக்கல்பித்தால் தீக்ஷித

வசனங்களின் விஷய பேதத்தை யறியாதாரென்று அய்யரவர்கள் அங்கீகரித்ததாக முடிந்துவிடும். அந்த சங்கிரஹ வசனம் ஸாமகர்களுக்கே பிரவர்த்தித்ததாக ஒப்புக் கொள்ளாமல் ரிக்வேதிகளுக்கும் பிரவர்த்தித்ததாக அங்கீகரித்தாலும் ஸாமகர்களுக்கு இந்த வசனம் பிரவர்த்திக்கவில்லை என்று சதுர்முகனுலும் சாதிக்கமுடியாது. லிங் முதலிய விதிபோதகமில்லாவிட்டாலும் இது அபூர்வமாயிருபபதால் விதியைக் கல்பித்துக்கொள்ளலாம் என்பது சகலதாந்திகர்களின்சம்மதம் ஆதலால் இந்த வசனத்தில் விதியில்லை யென்று சொல்லவும் முடியாது. இன்னமும் அபாபக்ஷத்தில் உபாகர்மம் செய்ய நேர்ந்தால் ஹஸ்தம், ஸாயம், திரிமுகூர்த்த வியாபியாக விருக்கவேண்டும் என்றுதானிவ்வசனத்திற்கு அர்த்தம் என்பது சரியல்ல. அப்படி வசனத்தினர்த்தம் புலப்படவில்லை. மேலும் அபாபக்ஷத்தில் உபாகர்மம் பண்ணவிதி இல்லை என்பவர் அவ்விதவிதியைக் கல்பித்து, கல்பித்தவிதியில் ஸாயம் திரிமுகூர்த்த வ்யாபியாக விருக்கவேண்டுமென்ற குணத்தை விதிப்பது உன்மத்தா லாபத்திற்குச் சமமாகும். ஆகையால் இந்தவசனமும் அபாபக்ஷஹஸ்தத்தில் உபாகர்மம் செய்வதில் பிரமாணமாகுமென்று அறியவேண்டும்.

9. ஒன்பாவது பாராவும் பொருந்தாது. வர்ணாச்ரமத்தில் குருசுக்கிர மௌட்யாதி தோஷங்களுக்குப் பிராயச்சித்தமாக சிலஹோமங்களையும், சில தானங்களையும், சில ஜபங்களையும், பொதுவாக விதித்துவிட்டு அந்த வசனத்திற்கு உரை எழுதும்போது அம்மந்திரங்களின் ஸ்வரூபத்தை யெழுதுவது தகுதியானலும் குஜமௌட்ய தோஷத்திற்குப் பிராயச்சித்தமந்திரங்கள் பிரகிருதமில்லாதபடியால் தீக்ஷிதர் அவைகள் எழுவில்லை. ஆதலால் அய்யாவர்கள் அபிப்பிராயத்திற்கு அதுவும் ஸாதகமாகாது என்று அறியவேண்டும். குஜனுக்கு மௌட்யதோஷமுண்டென்பதில் வேறு சிலயுக்திகளும் கீழே சொல்லிமுடித்திருப்பதால் மௌட்யதோஷம் குஜனுக்கு இல்லையென்பதும் தகாது.

10 பத்தாவது பாராவும் தவறு. கௌணம் முக்கியம் இவ்விருகாலங்களும் துஷ்டங்களாயிருந்தால், உபாகர்மம் நித்தியமானதாலும் வேறு நிர்துஷ்டமான காலமில்லாததாலும் தோஷமுள்ள முக்கியகாலத்திலேயே பிராயச்சித்தம் செய்து பூர்வகமாக உபாகர்மம் செய்ய வேண்டுமென்பது சித்தாந்தம்.

11. பதினொருவது பாராவும் சரியல்ல. அனத்தியயன மென்பது சகல உபாகர்மத்திற்கும் தோஷமா, இன்றேல் ஸாமகர்களின் உபாகர்மத்திற்கு மட்டிலுமா? முதல் பக்ஷம் சரியல்ல. பூர்ணிமாதிதியும் அனத்தியயன காலமானதால் யாஜுஷாதி சாகிகளுக்கும் உபாகர்மம் லோபத்தை யடைந்து விடும். யாஜுஷாதி சாகிகளுக்கு பூர்ணிமையில் பண்ணும்படி விசேஷவிதியிருப்பதால் லோபத்தை யடையாது என்றால் ஸாமகர்களுக்கும் ஹஸ்தர்க்ஷம் என்ற வாக்கியத்தால் கீழ்ச் சொன்னபடி அபரபக்ஷத்தில் பண்ணும்படி விசேஷ விதி இருக்கின்றது. மேலும் சூரியோபாகப் பிராயச்சித்த வசனங் களாலும் ஸதாசாரத்தாலும் ஸாமகர்கள் அனத்தியனத்திலும் உபாகர்மம் செய்யலாம் என்று கல்பித விதியுமிருக்கின்றது. அன்றியும் ஆசௌசாதிகளால் பூர்வ ஹஸ்தத்திலுபாகர்மம் நடக்காமற்போனால் அடுத்த ஹஸ்தம் அனத்தியயனத்திலிருந் தால் அனத்தியயனம் அப்போது தோஷமில்லை யென்றுதான் அய்யரவர்களும் சொல்லவேண்டும். இரண்டாவது சரியன்று. ஸாமகர்களுக்கு மாத்திரந்தான் அனத்தியயனம் தோஷ மென்பதில் பிரமாணமில்லை. எல்லாவிஷயத்திலும் சூத்திரக் காரரின் பிரகாசவசனத்தை விரும்பும்பக்ஷத்தில் ருத்திரஸ்கந் தர் கூறின பிரயோகங்களும், கிரஹஸ்தர்கள் உபாகர்மம் செய்யவேண்டுமென்ற விஷயமும் சூத்திரத்தில் பிரகாசமாகச் சொல்லாதபடியால் உபாகர்மானுஷ்டானத்தை எல்லோரும் விடும்படி நேரிடும். தவிர புகத்விதீயையும் அனத்தியயனமாக ஸ்மிருதிகளில் சொல்லியிருக்கின்றபடியால் பூர்வஹஸ்தத்தை அனத்தியயனதோஷம் விடவில்லை. ஆகையால் பூர்வஹஸ்தத் திலும் உபாகர்மம்பண்ணமுடியாது. மேலும் அனத்தியயன

தோஷத்திற்காக பிராயச்சித்த விதியும் அதன் அனுஷ்டானமும் ஆசாரத்திலில்லை. தவிர பூர்வஹஸ்தத்திற்கு ஔதயிக்கிமுமில்லை. ஆதலால் அய்யாவர்களும் பரஹஸ்தத்தைத்தான் கிரஹித்துக் கொள்ளவேண்டும்.

ஆகையால் ஸாமகர்கள் இவ்வருஷத்தில் வைத்திஞத தீக்ஷிதருடைய அபிப்பிராயத்தையும் ஸதாசாரத்தையும் அனுஸரித்தும் புரட்டாசி மாதம் அபரபக்ஷ ஹஸ்தத்தில்தான் உபாகர்மம் செய்யவேண்டும்.

வி. ஜகதீச சாஸ்திரிகள்.
பிரம்மஸ்ரீ, யக்ஞஸ்வாமி சாஸ்திரிகள், சிஷ்யாள்.

ஸாமவேத உபாகர்ம விஷயமாய் ஸ்ரீ சுப்பிரமணிய சாஸ்திரிகள் ஆர்யதர்மம் ௩௧-வது ஸஞ்சிகையில் சொல்லப்பட்ட ஸமாதானங்களுக்கு கிரமமாய் முக்கியமான சில பாராக்களுக்கு மட்டும்

இங்கு உத்திரம் கூறுவாம்.

1. இந்த உபாகர்மம், இதைப்போலுள்ள இதரஸ்மார்த்த ஸம்ஸ்காரங்கள் இவையெல்லாம் ஸ்மிருதிகளில் அபிப்பிராய பேதங்களுடன் விதிக்கப்பட்டிருக்கிறபடியால் அவை யெல்லாவற்றையும் வை- தீக்ஷிதர் முதலிய நிபந்தனைக்காரர்கள் எடுத்துரைத்து ஸித்தாந்தம் சொன்னாலும் சொல்லாவிட்டாலும் எல்லாவிடத்திலும **यथासूत्रं व्यवस्था** என்று தான் நிர்ணயம் செய்து அனுஷ்டிக்கவேண்டும். மேலும் ஸ்மிருதிகளுள் தன் தன் சாகையைச் சார்ந்துரைக்கப்பட்ட பரிசிஷ்டரூபமாகிய ஸ்மிருதிகளுக்கு அதிக கௌரவமும், தன் ஸூத்திரம் அதன் பாஷ்யம் இவைகளுக்கு ஸர்வ கௌரவமும் கொடுத்து நிர்ணயம் செய்வதுதான் யாக்ஞிகர்களாகிய பெரியோர்களுக்கு

அபிமதமாகும். அப்படியேதான் இவர் முதலில் அத்ரி வசனத்தை எடுத்துரைத்தார்:—

उपाकर्म स्वगृह्योक्तकाले कार्यं द्विजातिभिः ।

இந்த வசனத்தில் **स्वगृह्योक्तकाले** தன் கிருஹ்யத்தில் சொல்லப் பட்டகாலத்தில் என்று ஸ்பஷ்டமாயிருப்பதால் ஸந்தேகத் திற்கேயிடமில்லை. வை-தீக்ஷிதரும் எல்லா ஸ்மிருதி வசனங் களையும் எடுத்துரைத்து சித்தாந்தம் சொன்னாலும் சொல்லா விட்டாலும் **यथासूत्रं व्यवस्था** என்ற ஸாமான்ய நியாயப்படி கிருஹ்யப் பிரகாரம் அநுஷ்டிப்பதில் அவருக்கு யாதொரு ஆக்ஷேபமும் இருக்காதென்றே சொல்லலாம்.

2. **अनुक्तमन्यतो ग्राह्यं** என்றது ஸ்பஷ்டமாய் விதியில்லாத விடத்திலும் சாந்திக பௌஷ்டிக கர்மாக்களிலும் தான் முழு கர்மாவையும் எடுக்கவேண்டியதற்கு வரும். ஒரே கர்மாவில் அங்கமான காலாதிகள் அது விஷயமாய் ஸ்பஷ்டமாய் விதி யிருக்கும் காலத்திலேயே தள்ளிவிட்டு இதர ஸ்மிருதி ஸூத்தி ரங்களிலிருந்து வசனங்கள் அதன் இடத்தில் வாரா.

யாக்ஞிகர்கள் நித்தியமான கர்மாக்களில் தோஷம் நேர்ந் தால் அதற்குரிய சாந்திஹோமம் மட்டும் தான் செய்வார்கள். கர்மாவை சுத்த காலத்திற்கு ஒத்திப்போடமாட்டார்கள். அப்படி காலசுத்தியை ப்ரதமாரம்பங்களில் தான் எல்லாவிடத் திலும் கவனிக்கிறார்கள். அப்படியே திரிகாண்டியில் யாக்ஞிக வசனமிருக்கிறது,

आरम्भं दर्शपूर्णेष्ट्यो रग्निहोत्रस्यचादिमम् ।
प्रतिष्ठाः पञ्चकूर्माद्या मलमासे विवर्जयेत् ॥
उपरागोऽधिमासश्च यदि प्रथमपर्वणि ।
तथा मलिम्लुचे पौषे नान्दारम्भणमिष्यते ॥
गुरुभार्गवयोर्मौढ्ये चन्द्रसूर्यग्रहे तथा ।

மேலும் இந்த ப்ரகிருதத்தில்,

नित्ये नैमित्तिके जप्ये होमयज्ञक्रियासु च ।
उपाकर्मणिचोत्सर्गे ग्रहदोषो न विद्यते ॥

என்று ஸர்வ ஸாதாரணமாய் பரிபாஷையாக காலமாதவமென்ற கிரந்தத்தில் ஸர்வவேத பாஷ்யகாரராகிய வித்யாரண்யமாதவரால் நன்குரைக்கப்பட்டுள்ளது. நிர்ணயஸிந்துவிலும் இம்மாதிரியே கூறப்பட்டுள்ளது. இது அபவாத சாஸ்திரமாகையால் **शाखाधीशे शुभं** என்ற வசனத்திற்கும் இதைப்போல் தோஷமுண்டென்று விதிக்கிற இதர வசனங்களுக்கும் பாதகமாகி தோஷமில்லையென்றோ, தோஷம் கவனிக்கவேண்டியதில்லையென்றோ தான் அர்த்தத்தைக் கொடுக்கும்.

5. **शाखाधीशे शक्तियुक्ते तच्छाखाध्ययनं शुभम् ।**

இந்த வசனம் தான் ரொம்பவும் விவாதத்திற்கிடம் கொடுத்துவிட்டது. இது விதியா? நிஷேதமா? விதியானால் "சாகாதீசன் பலத்தோடிருக்கையில் சாகாத்தியயனம் சுபம்" என்றாகும். நிஷேதமானால் "சாகாதீசனுக்கு சக்தியில்லாவிடில் செய்வது சுபமல்ல என்று ஆகும். ஆனால் நிஷேதத்தை சரியாய் வெளிப்படுத்துகிறதான ஒரு குறியும் இதனிடத்தில் காணோம். இதற்கு "சக்தியற்றிருக்கும் காலத்திற்றான்" என்று அர்த்தம் செய்திருக்கிறார்கள். அதற்கு தாத்பரியக்ராகரகம் என்னவென்று தெரியவில்லை. ஆனால் இதில் அங்காரக தோஷத்தைச் சொல்லவில்லையென்று நாம் கூறவில்லை.

மேலும் இந்த வசனம் எந்த ஸந்தர்ப்பத்தில் எடுத்துரைக்கப்பட்டதென்று சற்று கவனிக்கலாம். முன்னால் ப்ரதம உபாகர்மம் கூடாதென்று சொல்லி தோஷபரிஹாரம் சொல்லி மறுபடியும்,

प्रथमोपक्रमे प्राप्ते कुलीरस्थे दिवाकरे ।

என்று "ப்ரதமம் வந்தால்" என்று ஆரம்பித்து சாகாதீசன் சக்திபெற்றிருக்கவேண்டுமென்று சொல்லி பிறகு இந்த வச

னம் குறிப்பிட்டிருக்கிறபடியால் இதுவும் இதன்பின்னர் சொல்லப்பட்டதும் ப்ரதம விஷயமாகத்தான் ப்ரவிர்த்தித்தது என்று கொள்ளலாம் மற்றும் ஷை प्रथमोपक्रमे என்பதிலிருந்து இதை விலக்கியறிவதற்கு வேண்டிய ஷரா முதலிய கமகம் ஒன்றும் அகப்படவில்லை. ஆகவே தான்,

यज्ञोपवीतं कर्तव्यं श्रावणे गुरुशुक्रयोः ।
बाल्ये मौढ्येऽपि वार्धक्ये कर्तव्यं नित्यकर्मवत् ॥

என்று ஸாமானியமாய் விதிக்கப்பட்டுள்ள உபாகர்ம விதியை "சாகாதீசன் சக்தியுள்ள காலத்திலென்றே அறியவேண்டும்" என்றதினுல் ப்ரதமவிஷயத்தில் ஸார்வ பௌமகிரந்தம் ஸங்கோசம் செய்தது போலும்.

"சிராத்தகாண்டத்தில் பொதுவாய் 'குருசுக்ர மௌட்யம் ஏற்பட்டால் சிற்சில கருமங்கள் செய்யக்கூடாதென்று நிஷேதித்திருப்பதைக்கொண்டு செய்யாமல் விடுவதுபோல் உபாகர்மத்தையும் செய்யாமல் விடக்கூடாது" என்று சொல்லி அதற்குத்தான் பதிலென்று, यज्ञोपवीतम् என்ற வசனத்தைக் கொள்ளவேண்டு மென்கிறுர்கள். இது ஸரியல்ல;

ஷை சங்கைக்கு பரிகாரம் முந்தியே வசிஷ்ட வியாஸ வசனங்களால் சொல்லப்பட்டுள்ளது. ஆகையால் இந்த வசனம் உபாகர்ம ஸாமானியத்தைக் குறிக்கின்றதேயாகும். அப்படி "சாந்தியுடன் செய்தாவது அவசியம் அனுஷ்டிக்கவேண்டியது என்று அதன் தாத்பரியமானுல் कर्तव्यं नित्यकर्मवत् . என்று வாக்கிய சேஷத்தில் காணப்படுகிற नित्य சப்தத்திற்கு அர்த்தமில்லாமல் போய்விடும். அவர்கள் பக்ஷப்படி முடிவிலும் போனுலும் சாந்தியுடன் முக்கிய காலத்திலனுஷ்டிக்கலா மென்றும் ஒப்புக்கொள்ளார்கள். शाखाधीशे என்ற வாக்கியம் முந்தியே उपाकर्मणि— न विद्यते என்ற வசனத்தினுல் பாதத்தையடைந்து நித்யமாகிய

௨வது முதலிய உபாகர்மாவை விட்டு ப்ரதம விஷயமாய் தோஷம் விதிக்கிற வாக்கியத்துடன் சேர்ந்து,

प्रकल्प्य वादविषयं उत्सर्गाः प्रवर्तन्ते ।

என்ற நியாயப்படி வாக்கியார்த்தத்தை அடைந்துவிட்டது. ஆகையால் "ग्रहदोषो न विद्यते" कर्तव्यं नित्यकर्मवत् "இம்மாதிரி வசனங்களை" தோஷமிருந்தால் விடுவதா? என்பதற்குப் பதிலாக சாந்திபூர்வகமநுஷ்டான விஷயமென்று சொல்வது ஸாஹஸமேயாகும். அப்படி தாத்பரியத்தை போதிக்கின்ற கமகம் ஒன்றும் காணப்படவில்லை. ஆகையால்,

प्रथमोपाकृतिश्चापि कर्तव्येत्याह गौतमः ।

என்ற ஒரு வசனத்தைத் தவிர மற்றொன்றையும் சாந்திபூர்வகாநுஷ்டானத்தைச் செய்வதாக எடுப்பது ஸரியல்ல. வைத்தியநாத தீக்ஷிதரும் அந்த ஒரு வசனத்தை மட்டும் தான் அவ்வபிப்பிராயமாகக் குறித்துள்ளார். (தொடரும்)

V. S. ராமநாத சாஸ்திரி.

கவிரத்னம்.

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளான ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்யஸ்வாமிகள் அவர்கள் சென்ற [23-9-23] ஞாயற்றுக்கிழமையன்று சிறந்தபண்டிதமணிகள் நிறைந்திருந்த ஸபையில் ஸ்ரீ மடம் ஆஸ்தான பண்டிதரும் மஹாமஹோபாத்யாயம் பிரம்மஸ்ரீ கணபதி சாஸ்திரிகள் அவர்களின் சகோதரரும், நமது 'ஆரியதர்மம்' பத்திரிகையின் உபபத்திராதிபருமான மஹோபதேசக ப. பஞ்சாபகேச சாஸ்திரிகளவர்களுக்கு ஷியாரால் வடமொழியில் இயற்றப் பெற்ற ஸ்ரீ தாடங்கப் பிரதிஷ்டா மஹோத்ஸவசம்பூ, ஆசார்ய அஷ்டோத்திரசதகம், வயோநிர்ணயபாவப்ரகாசிகா, முதலான கிரந்தங்களை சிலாகித்து அன்னாருக்கு "கவிரத்னம்" என்னும் பட்டத்தை ஸ்ரீ முகத்துடன் அனுக்கிரஹித்தார்கள்.

S. சாம்பமூர்த்திசாஸ்திரி.